**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
https://ngmtamil.in/
DOI: https://doi.org/10.63300/kijts05sp022026.15

# Cultural Transformations in the Ritual Practices of the Irula Tribe of Attappadi

**Dhanalaksmi R[1]*, Dr.T.Parameshwari[2],**
Ph. D Research Scholar (Part - time), Department of Tamil, N.G.M. College, Pollachi. Mobile: 9786588862
Associate Professor and HOD, Department of Tamil, N.G.M. College, Pollachi.
Email: parameshwarit78@gmail.com
*Corresponding Author: rdhanalakshmi38@gmail.com. Tel: 9600290032

**Article Info:** Received on 23-Feb-2026, Revised on 27-Feb-2026, Accepted on 27-Feb-2026, Published on 01-March-2026

## ABSTRACT

The Irula tribe is one of the ancient indigenous communities inhabiting the regions of the Western Ghats in South India, particularly in Tamil Nadu and Kerala. Traditionally, the Irula people have depended on forests and hill ecosystems for their livelihood and have developed rich indigenous knowledge systems along with distinctive ritual practices. However, rapid socio-economic changes, land alienation, modernization, and increased interaction with mainstream societies have gradually influenced their traditional way of life. These developments have led to noticeable transformations in their cultural traditions and ritual practices. The loss or modification of such indigenous traditions represents not only a change within the community but also a broader cultural concern. In this context, the present study examines the cultural transformations that have occurred in the ritual practices of the Irula community residing in Karuvadam hamlet in the Attappadi region. Adopting an ethnographic approach, the study documents ritual elements and analyses the social and cultural factors that have contributed to these changes over time.

***KEYWORDS:*** *Irula Tribe; Cultural Transformation; Ritual Practices; Indigenous Knowledge; Attappadi; Ethnography; Tribal Studies.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Kalanjiyam International Journal of Tamil Studies* ***E-ISSN 2456-5148***
Volume 5 | Issue 02, March 2026

# அட்டப்பாடி பகுதி இருளர் பழங்குடியினரின் பண்பாட்டு மாற்றங்களும் சடங்கியல் மரபுகளும்

[1]**தனலட்சுமி ரா.,** பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி.
[2]**முனைவர் த.பரமேசுவரி,** இணைப்பேராசிரியர், தமிழ்த்துறைத்தலைவர்,
என்.ஜி.எம். கல்லூரி பொள்ளாச்சி.

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழகத்தின் தொன்மையான பழங்குடிகளுள் இருளர் பழங்குடியினர் முதன்மையானவர். மேற்குத் தொடர்ச்சி மலையின் பல்வேறு இடங்களில் வசிக்கக்கூடிய இருளர் இன மக்கள் இம்மண்ணினுடைய பூர்வீக குடிகளாகக் கருதப்படுகின்றனர். உலகளாவிய ரீதியில் பல்வேறு வளர்ச்சியினை மனித இனம் எய்திவந்தாலும் பழங்குடியின மக்கள் இன்றளவும் அடிப்படை வாழ்வுரிமைகள் கிடைக்கப் பெறாமல் தொடர்ந்து துன்புறுகின்றனர். மலைப்பகுதிகளையும் காடுகளையும் வாழ்வாதாரமாகக் கொண்டு வாழக்கூடிய பழங்குடி மக்களிடமிருந்து நிலங்கள் பறிக்கப்படக்கூடிய காரணத்தினால் சமவெளி பகுதியில் வாழக்கூடிய மனிதர்களுக்கு நிகராக தங்களை உயர்த்திக் கொள்ளுவதற்குப் பெரிதும் முயற்சிக்கின்றனர். இதனால் மரபுசார்ந்த அறிவினையும் தொன்மையினையும் இம்மக்கள் இழக்க நேரிடுகிறது. பழங்குடி மக்கள் தங்களது மரபு சார்ந்த அறிவினை இழப்பது என்பது மனித குலத்திற்குப் பேரிழப்பாகும். அட்டப்பாடி பகுதியினை முதன்மை கள ஆய்வு பகுதியாக கொண்டு கருவடம் என்ற குக்கிராமத்தில் வசிக்கக்கூடிய இருளர் இன மக்களினுடைய வாழ்வியல் சடங்குகளில் ஏற்பட்டுள்ள பண்பாட்டு மாறுதல்களை அடையாளம் காண இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகிறது. பனுவலாக்கம் மற்றும் இனவியல் அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு, இம்மக்களின் சடங்கியல் கூறுகளைப் பதிவுசெய்து அவற்றில் காலப்போக்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் சமூகத் தாக்கங்களையும் ஆராய்வதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**

இருளர் பழங்குடியினர்,சடங்கியல் நடைமுறைகள், பண்பாட்டு மாற்றம், அட்டப்பாடி, பூர்வீக அறிவு, பழங்குடி வாழ்வியல்

**முன்னுரை**

தமிழக பழங்குடிகளில் மிகவும் தொன்மையான பழங்குடியினராக கருதப்படக் கூடியவர்கள் இருளர் இன மக்கள். இருளர் என்பதற்கு கருமை நிறம் உடையவர்கள் என்று பொருள் கொள்வர். கோயம்புத்தூர் வனப்பகுதிகளில் வாழ்ந்து வந்த இருளர் இன மக்கள் பதினாறாம் 17ஆம் நூற்றாண்டுகளில் விஜயநகர பேரரசு காலத்தில் அட்டப்பாடி வனப் பகுதிக்குக் குடி பெயர்ந்ததாக செய்திகள் கிடைக்கப்பெறுகின்றன. விவசாயத்தை முதன்மைத் தொழிலாகக் கொண்டுள்ள இம்மக்கள் கால மாற்றத்திற்குத் தக்கவாறு தங்களுடைய வாழ்வியலிலும் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டதோடு மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள தூண்டவும் பெறுகின்றனர். தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் வாழக்கூடிய இருளர் இன மக்களிடையே காணப்படக்கூடிய

சடங்கியல் முறைகளில் பல்வேறு மாற்றங்கள் இருப்பதை ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. அட்டப்பாடி பகுதிகளில் வசிக்கக்கூடிய இருளர் இன மக்களினுடைய சடங்கியல் கூறுகளால் காலத்தால் ஏற்பட்டு இருக்கக்கூடிய மாற்றங்களையும் அவர்களது பண்பாட்டுத் தொன்மையினையும் ஆராய்வதாக இக்கட்டுரையானது அமைகிறது.

**ஆய்வுக் களம்**

தமிழ்நாடு கோயம்புத்தூர் மாவட்டத்தின் எல்லை பகுதியில் கேரள மாநிலத்தின் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் பழங்குடியினத் தாலுகாவாக அட்டப்பாடி அமைந்திருக்கிறது. 139 கிராமங்களும் ஆறு வருவாய் கிராமங்களுக்குள் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு கிராமமும் 50 முதல் 100 குடியிருப்புகளைக் கொண்டிருக்கிறது. அட்டப்பாடி மலைப்பகுதியில் இருளர், முடுகர், குறும்பர் ஆகிய மூன்று பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர். இருளர் இன மக்கள் மலையடிவாரத்தையும் முடுகர் இன மக்கள் மலைப்பகுதிகளையும் தங்களது வாழ்விடமாகக் கொண்டுள்ளனர். இன்றைக்கு குறும்பர் இன மக்கள் எண்ணிக்கையில் மிகக் குறைந்த அளவே காணப்படுகின்றனர். ஆற்றோரப் பகுதிகளில் விவசாயத்தையும் ஆநிரை மேய்த்தலையும் முதன்மைத் தொழிலாகக் கொண்டிருக்கக் கூடிய கருவடம் கிராமமே இக்கட்டுரையின் ஆய்வு எல்லையாகும்.

**திருமணச் சடங்கு**

இருளர் இன மக்களினுடைய திருமண சடங்கானது சமவெளிப் பகுதிகளில் நடப்பதைப் போன்ற நீண்ட கொண்டாட்டங்களை உடையதாக அமையவில்லை. ஆண் மற்றும் பெண் இருவருக்கும் மனம் ஒத்து வருகின்ற நிலையில் திருமணம் நடைபெறுகிறது.

**“ஹார்க்னெஸ் என்பவர் இருளர்கள் திருமணத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது இருளர்களிடையில் திருமண ஒப்பந்தம் என்று சொல்லத்தக்க சடங்கு எதுவும் காணப்படவில்லை”**(இருளர் வாழ்வியல்,ப.49)திருமணநாள் குறித்தும் திருமணம் குறித்தும், பெண்ணினுடைய வீட்டிலேயே முடிவு செய்யப்படுகிறது. திருமணத்திற்கு முந்தைய நாள் பெண் வீட்டிலிருந்து பெண் மணமகன் வீட்டிற்கு அழைத்து வரப்படுகிறார். திருமணத்தன்று அதிகாலையில் மணமகன் வீட்டின் முன் இருளர் இனத்தினுடைய தலைவர் மற்றும் பெரியோர்கள் வரிசையாக அமர்கின்றனர். புது துணி அணிந்த மணமக்கள் இருவரும் பெரியார்களின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெறுகின்றனர். இதற்குப் பின்னரே “குலசாரை பூட்டுதல்” என்ற தாலி கட்டும் நிகழ்வானது நடைபெறுகிறது. இருளரிடையே வெள்ளாக, குருநாக, காரட்டிகா, குப்பார், ஆறுமூப்பு, சாம்பர், தேவனார் ஆகிய 7 பிரிவுகள் முதன்மையாகக் கருதப்படுகிறது. இவ்வேழு பிரிவுகளில் இருந்தும் ஏழு குல முதன்மையர்கள் மந்திரம் சொல்லி மணமகனுடன் இணைந்து மணமகள் கழுத்தில் தாலி அணிவிக்கின்றனர். இருளர் இன மக்களினுடைய தாலியானது கருப்பு கயிறாகவும் கருப்பு பாசிகள் கோர்க்கப்பட்டதாகவும் அமைகிறது. இதனை “சுளுந்தி” என்ற பெயரால் அழைக்கின்றனர். இதனை அணிகின்ற பொழுது பெண்களுக்கு ஆயுள் நீடிக்கும் என்ற நம்பிக்கையும் இம்மக்களிடையே காணப்படுகிறது. ஏழு பிரிவுகளில் உள்ள மூத்தோரை முதன்மையாகக் கொண்டு திருமணம் நடைபெறுவதால் மன மக்கள் இருவரிடையே பிற்காலத்தில் சண்டை நிகழ்கின்ற பொழுதும் அவர்களை முதன்மையாகக் கொண்டே பேசி தீர்க்கப்படுகிறது.

திருமணம் முடிந்த மதியத்தில் பெண் வீட்டிற்கு விருந்தளிக்கும் பொருட்டு மணமகன் வீட்டில் இருந்து சோறு குழம்பு பொரியல் ஆகிய ஏற்பாடு செய்யப்பட்டு எடுத்துச் செல்லப்படுகிறது. இதனை

மணமக்களே பரிமாறுகின்றனர். மறுநாள் இதேபோல் மணமகள் வீட்டில் இருந்து மணமகன் வீட்டிற்கு விருந்துணவானது அனுப்பப்படுகிறது. வசதி கருதியும் எளிமை கருதியும் இன்று உணவிற்ப்கு பதிலாக அரிசி, பருப்பு, காய்கறி உட்பட்ட பொருட்கள் இருவர் வீட்டிற்கும் முறையே மணமக்கள் கொண்டு செல்வதாக கள ஆய்வு வெளிப்படுத்துகிறது. இவ்வாறு எளிமையாக நடைபெற்று வந்த இருளர் இன மக்களினுடைய திருமணமானது தற்போது நிச்சயதார்த்தம் செய்தல், மோதிரம் மாற்றிக் கொள்ளுதல், நன் நிமித்தம் பார்த்தல், முகூர்த்தம் குறித்தல் போன்ற பல்வேறு பண்பாட்டு ஊடுருவல்கள் நிகழ்ந்திருப்பதை கள ஆய்வின்வழி அறிய முடிகிறது. இன்றளவும் பிரதானமான இருளர் இன மக்கள் கருப்பு பாசியினையேத் தாலியாக அணிவித்துக் கொண்டிருந்தாலும் சில சமயங்களில் மஞ்சள் கொம்புடைய மஞ்சள் கயிற்றையும் தாலியாக அணிவிக்கின்றனர். சமவெளிப் பகுதிகளில் காணப்படுவதைப் போன்று தங்க நகைகள் பெரிதும் அணிந்து மணப்பெண் காணப்படுவதில்லை. மக்களின் பொருளாதார வாசதிக்குத் தகுந்தார் போல இன்று திருமண முறைகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு இருப்பதைத் தகவலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

**பெருந்திணை மணத்தின் எச்சம்**

இருளர் இன மக்களின் திருமணம் முடிந்த அடுத்த நாள் தண்ணீர் எடுத்து வருதல் என்ற சடங்கானது நடைபெறுகிறது. இருளர்களுடைய சடங்கு முறைகளில் ஜாத்தி என்பவர் முதன்மையிடம் வகிக்கின்றார். ஜாத்தி என்பது ஒரு பதவியைப் போன்றது. பல்வேறு சடங்கியல் கூறுகள் தவறாமல் நடைபெறுவதைக் கண்காணிப்பவராகவும் இருளர் இன மக்களுக்கு சடங்குகளின் போது உதவக் கூடியவராகவும் ஜாத்தி திகழ்கிறார். திருமணம் முடிந்த மறுநாள் காலையில் ஜாத்தி உட்பட மணமகனின் மாமன் மற்றும் அத்தை மணமக்களுடன் இச்சடங்கில் பங்கு கொள்ளுகின்றனர். மணமகள் ஆற்றுக்குச் சென்று தண்ணீர் எடுத்து வருகையில் மணமகன் தன் மாமனுடன் வில் மற்றும் அம்பு கொண்டு ஆற்றங்கரையில் காத்திருப்பதும் தண்ணீர் எடுத்து முடித்தவுடன் வீடு வரை உடன் வருவதுமாக இச்சடங்கானது நடைபெறுகிறது. இதுவே திருமணத்தின் இறுதி சடங்காகவும் கருதப்படுகிறது. மணமகளை மணமகன் பாதுகாப்பது என்ற அமைப்பில் இச்சடங்கானது நிகழ்த்தப்படுவதாக இருளர் இன மக்கள் நம்புகின்றனர். இருப்பினும் பல்வேறு பழங்குடியின மக்களின் திருமண சடங்குகளை ஆராய்கின்ற பொழுது இச்சடங்கானது பெருந்திணை மணத்துடன் தொடர்புடையதாக அமைந்து இருப்பதை ஆய்வின் வழி வெளிக்கொணர முடிகிறது.தொல்காப்பியர் குறிப்பிடுகின்ற ஏழு அகத்திணைகளில் பெருந்துணையும் ஒன்று.

> **ஏறிய மடல் திறம் இளமை தீர்த்திறம்**
> **தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்**
> **மிக்க காமத்து மிடலோடு தொகை இச்**
> **செப்பிய நான்கும் பெருந்தினை குறிப்பே. (தொல்.பொருள்.54)**

நான்கு குறிப்புகளின் அடிப்படையில் பெருந்தினை நிகழ்வதைத் தொல்காப்பியர் சுட்டிக்காட்டுகிறார். இதில் மிக்க காமத்து மிடல் என்ற காமத்தின் மிகுதியால் தலைவியை அடையக்கூடிய எண்ணத்தின் தொடர்ச்சியாகவே மகட்பாற்; காஞ்சியானது இடம்பெறுகிறது. **“தொல்காப்பியர் குறிப்பிடும் பெருந்தினையின் ஒருவகையாகிய மிக்க காமத்து மிடல் என்பது கடத்தல் மணந்தோடு தொடர்புடையது என்கிறார் பெண்களை கடத்திச் செல்வதான ஒரு வழக்கு**

**தமிழக பழங்குடியினர் பண்பாட்டில் ஒரு சடங்காக நிகழ்வதை அறிய முடிகிறது**" (சங்க கால மரபுகள் கட்டுடைப்பும் கட்டமைப்பும், ப.35) என்று சிலம்பு செல்வராசு குறிப்பிடுகிறார்.

ஒடிசா நாட்டு கஞ்சம் மாவட்டத்தைச் சேர்ந்த கோண்டுகள், தமிழகத்தைச் சேர்ந்த முதுவர், ஊராளி, கோயி ஆகிய இன மக்களின் திருமணத்தில் இதுபோன்ற சடங்கு முறைகள் இருப்பதைக் காண முடிகிறது. நிச்சயத்திற்குப் பின் விறகு தூக்கவும் தண்ணீர் எடுக்கவோ செல்லும் பொழுது பெண்ணைக் கடத்தி வருவதைப் போன்று பாவனை செய்தல், ஊர் எல்லையில் பெண்ணைப் போர் புரிந்த திருமணம் செய்து கொள்வது போன்று செய்தல், தந்தை பெண் தர மறுக்க நண்பர்களுடன் சேர்ந்து பெண்ணைக் கடத்திச் செல்லுதல் போன்று பாவனை செய்தல் போன்ற முறைகளை பல்வேறு சடங்கியல்களாக பழங்குடியின மக்கள் நிகழ்த்துகின்றனர். இதன் தொடர்ச்சியாகவே இருளர் இன மக்களிடையே காணப்படக்கூடிய இச்சடங்கினைக் காண முடிகிறது. தண்ணீர் எடுக்கச் செல்லக்கூடிய பெண்ணினைக் கடத்தி வந்து திருமணம் செய்து கொள்ளக்கூடிய முறையே பிற்காலத்தில் பல்வேறு மாற்றங்களை எய்தி பாதுகாப்பின் குறியீடாக மாறி இருக்கக் கூடும் என்று அறியமுடிகிறது. மக்களினுடைய மரபுகளில் ஊன்றிப் போன செயல்பாடுகள் காலத்தின் மாற்றத்தினால் தேவையற்றதாக இருப்பினும் போலசெய்தல் என்ற முறையினால் தொடர்ந்து தலைமுறைகள் தாண்டியும் கடத்தப்பட்டு வருகிறது. அதன் தேவையும் பயன்பாடும் இன்றைய காலத்தில் தேவையற்றதாக கருதப்பட்டாலும் மரபு சார்ந்த அறிவின் தொடர்ச்சியாகவே இத்தகைய சடங்கு முறைகளை அடையாளப்படுத்த முடிகிறது.

**வளைகாப்புச் சடங்கு**

வளைகாப்பு சடங்கு என்பது இருளர் இன மக்களிடையே பெரும்பாலும் கடைபிடிக்கப்படுவதில்லை பெண்கள் தங்களுடைய கணவன் வீட்டிலேயே குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். பின்னாளிலேயே வளைகாப்பு, வளையல் பூட்டுதல் போன்ற நடைமுறைகள் இம்மக்களிடையே தோன்றியதாக தகவலாளர்கள் குறிப்பிடுகின்றனர். இன்றைக்கு நடைபெறக்கூடிய வளைகாப்பு சடங்குகளில் பெண்களுக்கு குப்பி வளையல் அணியப்பட்டு தாய் வீட்டிற்கு அழைத்து வரப்படுகிறார்கள். பெண்ணிற்கு முதல் குழந்தையாக பெண் குழந்தை பிறந்தால் ஆறு நாட்கள் கழித்தும் முதல் குழந்தையாக ஆண் குழந்தை பிறந்தால் ஐந்து நாட்கள் கழித்தும் தாய்க்கு உணவு வழங்கப்படுகிறது. இதை தொட்டில் கட்டும் சடங்கு என்றும் குறிப்பிடுகின்றனர். ஆற்றுக்குச் சென்று மீன் பிடித்து ராகி களி கிண்டி குழந்தையைத் தொட்டிலிட்ட பின்னரே பெண்ணுக்கு உணவானது வழங்கப்படும் என்று குறிப்பிடுகின்றனர். இருப்பினும் இச்சடங்கானது நவீனமயமாக்கலுக்குப் பின்னர் இருளர் பண்பாட்டில் தோன்றியதாகச் சுட்டப்படுகிறது. பொருளாதாரம் காரணமாக சமவெளியில் பயணிக்க கூடிய இருளர் இன மக்கள் இங்கு மக்கள் கடைபிடிக்கக்கூடிய சடங்கு முறைகளை கண்டு அதனை தங்களுடைய பண்பாட்டிலும் புகுத்திக் கொள்ளுகின்றனர். மகிழ்வையும் பரிமாற்றத்தையும் அடிப்படையாகக் கொண்ட இதுபோன்ற சடங்கு முறைகள் சமவெளிப் பகுதிகளில் இருந்தே மலைப்பாங்கான இடங்களில் வசிக்கக்கூடிய இருளரின மக்களுக்குக் கடத்தப்படுகிறது. இது அவர்களது வாழ்வியல் முறையில் பெரிதும் மாற்றங்களை நிகழ்த்தி இருப்பதையும் மகிழ்வுக்காக தொடங்கப்பட்ட இச்சடங்கு முறைகள் பின்னால் மரபு வழி ஆகப்படும் பொழுது அதனை நிறைவேற்றும் பொருட்டு இருளர் இன மக்கள் அடையக்கூடிய பல்வேறு சிக்கல்களையும் கள ஆய்வில் காண முடிகிறது.

**பூப்புச் சடங்கு**

பெண்களின் பருவ மாற்றத்தை வெளிப்படுத்துவதாக அமைவது பூப்புச் சடங்காகும்.

**“பூவே பின்னால் கிடைக்கும் பலவிற்கும் தொடக்கம். அதனால்தான் பெண் இனப்பெருக்கத்திற்குரிய வயதடைந்ததைப் பூவின் பெயரால் பூப்பெய்தல் என்று குறிப்பிடுகின்றனர்.”**(நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள்,ப.184)

பெண்கள் பூப்பெய்தியவுடன் வீட்டிற்கு வெளியில் குடிசைகட்டி அமர வைக்கப்படுகின்றனர். இக்குடிசையானது தாய் மாமனால் ஈமம் புல் கொண்டு கட்டப்படுகிறது. ஐந்து நாள் கழித்து ஆறாம் நாள் வெறுமனே தண்ணீர் ஊற்றுகின்றனர். ஏழாம் நாளே மிக முக்கிய சடங்குகளை நிகழ்த்துகின்றனர். தாய்மாமனின் மனைவி அத்தை பெண்ணுக்குத் தண்ணீர் ஊற்றி வீட்டிற்கு அழைத்து வருகிறார். அவ்வாறு அழைத்து வரும்பொழுது மடியில் எண்ணெய், பலா பிஞ்சு, சீப்பு, உலக்கை ஆகியவை கொடுக்கப்படுகிறது. எண்ணெய்யும் சீப்பும் பெண்களுக்குரிய அலங்கார பொருள் என்பதாலும் உலக்கையானது தெய்வத்திற்கு ஒப்பாக கருதப்பட்டும் பலா பிஞ்சானது பால் தரும் கனி என்பதால் வளமையும் செழுமையும் பிறக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கொடுக்கப்படுகிறது. அவ்வாறு வீட்டிற்கு அழைத்து வருகின்ற பெண்ணை வாசலில் நிற்க வைத்து கையில் உணவினைக் கொடுப்பர். அவ்வுணவினைப் பெண் மூன்று விரல்களால் எடுக்கும் பொழுது மாமன் மகள் முறைக்கொண்டோர் அதனைத் தட்டி விடுகின்றனர். இவ்வாறு மூன்று முறை செய்த பின்னர் பூப்புச் சடங்கானது நிறைவு பெறுகிறது. இச்சடங்கினுடைய பயனும் பின்புலமும் ஆராயதக்கது. இருப்பினும் இன்றளவில் இச்சடங்கானது கொண்டாட்ட முறையுடனே நடைபெறுவதை அறிய முடிகிறது.

**இறப்புச் சடங்கு**

இருளர் இனத்தில் இறப்பு நிகழுமேயானால் இறந்தவரை அவரது பிறந்த ஊருக்கே எடுத்துச் சென்று புதைக்கக் கூடிய வழக்கமே காணப்படுகிறது. களாய்வு மேற்கோள்ளப்பட்ட இடத்தில் ஏழு ஊர்க்குப் பொதுவாக சுடுகாடு அமைந்திருப்பதை அறியமுடிகிறது. இறந்தவுடன் சப்பரம் அல்லது பாடை கட்டுவர். இறந்தவருக்கு மருமகள் முறையாக கூடிய இரண்டு பேர் மண் கும்பத்துடன் ஆற்றுக்குச் சென்று மூழ்கி தண்ணீர் எடுத்து வந்து அதில் மஞ்சள் கலந்து நீரினை சவத்தின் வாயில் ஊற்றி உடம்பில் தெளிக்கின்றனர். இறந்தவர் ஆணாக இருந்தால் அவர்களுடைய கால் விரல்களைக் கட்டுகின்ற பழக்கம் இம்மக்களிடையே காணப்படுகின்றது. இறந்த உடலை இம்மக்கள் சவம் என்று குறிப்பிடுகின்றனர். மூங்கிலால் செய்யப்பட்ட பாடையில் சவத்தைச் சுடுகாடு வரை எடுத்துச் செல்கின்றனர். அவ்வாறு எடுத்துச் செல்லக் கூடிய பாடையையும் நீர் கும்பத்தினையும் இடுகாட்டிலேயே புதைத்து விடுகின்றனர். இறந்தவர் பெண்ணாக இருந்தால் அவருடைய உடம்பிலிருந்து மூக்குத்தி கம்மல் போன்ற அணிகலன்களை களைவதற்கு ஜாத்தி வருவர். இறந்தவரின் தாலியை அகற்றி அவரது வலப்புறமோ இடப்புறமோ புதைத்து விடக் கூடிய வழக்கத்தை இம்மக்கள் கடைபிடிக்கின்றனர். இறந்தவரைப் புதைத்தவுடன் இறப்புச் சடங்குகள் நிறைவு பெறுகின்றன. ஆறு மாதம் கழித்து இறப்புச் சடங்கிற்குரிய சீரானது நிகழ்த்தப்படுகிறது. இருளர் இன மக்களில் தலைவராக கருதப்படக் கூடிய மூப்பனிடம் கலந்து பேசி இறந்தவருக்கு மருமகன் முறையாக கூடியவர்கள் அனைவரும் சேர்ந்து பணம் பெறுகின்றனர். மூப்பனிடமிருந்து பெறக்கூடிய இப்பணமானது இறந்தவருக்கு உறவினர்களாகவும் ஊர் பொதுமக்களாகவும் சேர்ந்து

சீருக்காக அளிக்கப்படக்கூடியதாகும். ஆறு மாதம் கழித்து இறந்தவரின் வீட்டில் கிடாய் வெட்டி இச்சீரானது நடைபெறுகிறது.

**முடிவுரை**

பல்வேறு அரசியலமைப்புகள் ஏற்பட்டு இருந்தாலும் தங்களுக்கு என ஒரு நிர்வாக முறையினைக் கொண்டவர்களாக இருளர் இன மக்கள் காணப்படுகின்றனர். இருளர் இன மக்களினுடைய வாழ்க்கை வட்ட சடங்குகளை ஆவணப்படுத்துகின்ற பொழுது பல்வேறு மாற்றங்களைச் சடங்கியில் கூறுகள் அடைந்திருப்பதை அறிய முடிகிறது. இம்மாற்றங்களைத் தகவலாளர்களும் களாய்வின் போது பகிர்ந்து கொண்டனர். இவ்வாறான மாற்றங்கள் தங்களுடைய பண்பாட்டு கூறுகளில் நேர்ந்திருப்பதை அறிந்திருந்த போதிலும் கூட நகரமயமாதல், உலகமயமாதல் மற்றும் சமவெளி மக்களுடன் தொடர்பில் இருத்தல் போன்ற காரணங்களினால் அதனைத் தவிர்க்க முடியாமல் தொடர்வதாகவும் தெரிவிக்கின்றனர். நவீன அறிவியல் வளர்ச்சியும் தொழில்நுட்ப வளர்ச்சியும் அவர்களைச் சென்று சேராததால் நாகரீகமற்றவர்கள் என்று சமவெளி மனிதர்களால் ஒதுக்கப்படுகின்ற பொழுது அங்கீகாரத்தை வேண்டி தங்களுடைய பண்பாட்டிலும் வாழ்வியல் முறைகளிலும் பல்வேறு மாற்றங்களை விரும்பியும் விரும்பாமலும் இருளர் இன மக்கள் ஏற்றுக் கொள்ளுகின்றனர். இருப்பினும் தங்களது பண்பாட்டுச் சடங்கியல் கூறுகளைக் காப்பதிலும் பின்வரும் தலைமுறைக்குக் கடத்துவதிலும் ஆர்வம் கொண்டவர்களாகவே களாய்வுக்கு உட்படுத்தப்பட்ட இருளர் இன மக்களைக் காண முடிகிறது. பழங்குடியின மக்கள் இயற்கையோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதால் இயற்கையில் இருந்து பெறக்கூடிய மரபு சார்ந்த அறிவினைக் கொண்டிருக்கின்றனர். ஆற்றோரப்பகுதிகளில் வசிக்கின்ற காரணத்தினால் அவர்களது சடங்கு முறைகளில் ஆறு நிலையான இடத்தைப் பெற்றிருப்பதை அறிய முடிகிறது. இருளர் மட்டுமின்றி பழங்குடியின மக்கள் அனைவரையும் அவர்களது இயல்பிலேயே ஏற்றுக் கொள்ளக்கூடிய மனநிலையை மனித சமுதாயம் பெற வேண்டும். நாகரிகம் என்பது உடையிலும் மொழியிலும் காணக்கூடிய மேட்டுமைத்தனம் அன்று பண்பாட்டில் காணப்படக்கூடிய முதிர் நிலையே என்கின்ற வாதத்தை அனைவரும் உணருகின்ற பொழுது பழங்குடியின மக்களும் தங்களுக்குரிய அங்கீகாரத்தைப் பெறுவர்.

**தகவலாளர் பட்டியல்**

1. மருதி, 55, இருளர், விவசாயம், படிப்பறிவில்லை
2. கருமி, 60, இருளர், விவசாயம், படிப்பறிவில்லை

**துணைநூற்பட்டியல்**

[1]. இளம்பூரணர்(உ.ஆ), தொல்காப்பியம் பொருளதிகாரம்,சாரதா பதிப்பகம், சென்னை. 2018.

[2]. செல்வராசு, நா. சிலம்பு, சங்க கால மரபுகள் கட்டுடைப்பும் கட்டமைப்பும், அன்னம்- அகரம் பதிப்பகம்,தஞ்சாவூர், 2010.

[3]. பக்தவச்சல பாரதி, தமிழகப்பழங்குடிகள், அடையாளம் பதிப்பகம்,2018.

[4]. பெரியாழ்வார், ஆர்., இருளர் வாழ்வியல், தமிழ் நூலகம், சென்னை,1976.

[5]. லூர்து,தே.,(ப.ஆ) நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள், பாரி நிலையம்,2012.